[1992 ஜனவரி 30

7—

காட்டு வளத்தை மேம்படுத்த நடவடிக்கை.

* 4173—திரு. கி. தர்மலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காட்டு வளத்தை மேம்படுத்த அப் பகுதியிலேயே வாழும் இளைஞர்களுக்கு வன இலாகாவில் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுவளத்தை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக காட்டை அழிக்கும் நகர்ப்புற மரக் கடத்தல்காரர்கள் அந்தக் காட்டுப் பகுதியிலே இருக்கும் வேலை இல்லாத வாலிபர்களைப் பயன்படுத்தி காட்டை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மலைப் பகுதியில் இருக்கும், குறிப்பாக மலைவாழ் மக்களுக்கும் அந்த வன இலாகாவிலே பணி வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையில் பணிபுரியும் சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையிலும் அவர்கள் அந்தந்தப் பகுதியைச் சார்ந்தவர்களேயாவர். தற்போது போதிய அளவில் அவர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதால், மேலும் ஆட்களை எடுக்க கருத்துரு எதுவும் இல்லை.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் வன இலாகாவில் ஆள் எடுக்கும்போது, நமது புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தந்தப் பகுதியில்

1992 ஜனவரி 30]

இருக்கும் வேலை இல்லா வாலிபர்களுக்கு வேலை வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டில் இணையற்ற முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன இலாகாவிலே பணியாற்றிய சுமார் 2 ஆயிரம் பேர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே பணி இடங்களுக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆனால் அதற்குப் பின்னால் அவர்கள் அந்தப் பணியிடங்களிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களை மீண்டும் அந்த இலாகவில் நியமித்து, அவர்கள் வேலை செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களுக்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாமல் இருக்கும் பல ஏக்கரா நிலங்களில் மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8. திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.